**ஏறாவூர் நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முத்திரைத் தீர்வை ரூபா 326,764 பெறப்பட வேண்டியிருந்துள்ள போதிலும் அவற்றினை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தவில்லை. | பெறப்படவேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா 326,764 தொகை நிதிக்கூற்றில் காட்டப்படவேண்டும் | அரசிறை நிலுவைக்குள் பெற வேண்டிய முத்திரை தீர்வை மற்றும் ஏனைய வருமானங்களும் ஐந்தொகையில் (UC 18) வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

### 1.4 இணங்காமை

#### 1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 371 | பல வருடங்களாக வழங்கப்பட்ட முற்பணங்கள் தொகை ரூபா 3,149,332 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல வருடங்களாக சீர் செய்யப்படாமல் காணப்படுகின்ற முற்பணங்கள் தற்போது அடையாள படுத்தபப்பட்டு பதிவழிப்பதற்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ii) நிதி ஒழுங்கு விதி 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,023,038 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல வருடங்களாக இனங்காணப்படாத வைப்புக்களை தற்போது ஒவ்வொரு தலைப்பின் கீழும் வகைப்படுத்தப்பட்டு செலுத்தப்பட வேண்டிய வைப்புத்தொகை மீளளிப்பு செய்வதற்கு வருமானத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை அறியத்தருகின்றேன் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,101,063 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,673,521 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் பற்றிய விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வருமான தலைப்பு | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிப்பப்பட்ட வருமானம் | அறவிட வேண்டிய நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிப்பப்பட்ட வருமானம் | அறவிட வேண்டிய நிலுவை |
| வீத வரிகள் மற்றும் வரிகள் | 9,145,500 | 17,758,436 | 6,152,549 | 11,605,886 | 3,708,000 | 15,111,703 | 4,583,686 | 10,528,016 |
| வாடகை | 2,200,000 | 5,388,445 | 2,049,927 | 3,338,518 | 4,216,130 | 8,975,694 | 6,458,141 | 2,517,552 |
| அனுமதிப்பத்திரம் | 6,975,000 | 8,673,055 | 5,686,800 | 2,986,255 | 1,650,000 | 3,515,240 | 1,805,650 | 1,709,590 |
| ஏனைய வருமானம் | 101,942,500 | 105,443,764 | 81,073,908 | 24,369,856 | 70,470,160 | 70,804,398 | 71,300,176 | 1,575.399 |
| மொத்தம் | **120,263,000** | **137,263,700** | **94,963,184** | **42,300,515** | **80,044,290** | **98,407,035** | **84,147,653** | **16,330,558** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆரம்ப நிலுவையாக ரூபா 17,097,544 காணப்பட்ட போதிலும். இத் தொகை வருட இறுதியில் ரூபா 23,288,690 ஆக விரித்தியடைந்திருந்தது. மேலும் முந்திய காலத்துக்குரிய மொத்த நிலுவைத் தொகை முழுவதும் அறவிடப்படவில்லை. | பதிவுகள் நாளதுவரைபடுத்தபட்டு நிலுவைகள் அரவிடப்பட வேண்டும். | தங்களது பகுப்பாய்வின் பிரகாரம் வருமான சேகரிப்பில் நிலுவையாகக் காணப்படும் தொகையில் பெரும்பகுதி 2015 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிக்குரியதாகும். இதற்குரிய எவ்விதமான பதிவேடுகளும் இங்கு காணப்படவில்லை என்பதுடன் இத் தொகை தொடர்ந்தும் இறுதிக் கணக்கறிக்கையில் நிலுவையாக காணப்படுகின்றது. இதனை ஒவ்வொரு வருடமும் மதிப்பிடப்படும் தொகைக்கு மேலதிகமாக அறவிடப்படும் சந்தர்பத்தில் இந் நிலுவையினை குறைத்துக் கொள்ள முடியும். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கேள்வி வாடகை, இறைச்சி கடை குத்தகை, பழைய சந்தைக் குத்தகை ரூபா 4,975,606 தொகை 2012 ஆம் ஆண்டில் இருந்து அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | அலுவலகத்தில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலே அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் சரியான பதிவுகளை பேணுவதே பொருத்தமானது. | இத்தொகைகளானது தங்களது பகுப்பாய்வு அறிக்கையின் நிலுவைத் தொகையுடன் ஒப்பிடும் போது மாறுபட்ட தொகையாக காணப்படுகின்றது. |
| (ஆ) | தமாசவரி ரூபா 179,630 நீண்ட நாட்களாக அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | இத் தொகையை அறவிட நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டும். | குறித்த திரைப்பட மாளிகை முகாமையாளர் குடி பெயர்ந்து வெளிநாட்டில் வசித்து வருவதாக அறியக் கிடைத்ததன் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| | | இந்நிலுவையினை எம்மால் அறவிடமுடியாமல் உள்ளது என்பதனை அறியத் தருகின்றேன். |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,257,400 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,533,672 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணத் தொகை ரூபா 10,257,400 இல் ரூபா 2,967,550 மீளளிப்புக்காக மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 7,289,850 எமது சபைக்கு பெறப்பட வேண்டியது.<br>மேலும் நீதிமன்றத் தண்டபணமான ரூபா 2,535,672 வானது 2020 மே மாதத்தில் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்<br>2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். | அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | திண்மக்கழிவு முகாமைத்துவம்<br>சில கழிவுப் பொருட்கள் ஆற்றங்கரையில் கொட்டப்படுவதுடன் கூட்டுப்பசளையும் தயாரிக்கப்படுவதும் இல்லை. | முறையாக கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்கும் கூட்டுப்பசளை தயாரிக்கப்படுவதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையில் கிடைக்கக் கூடிய வளங்களை பயன்படுத்தி, பொதுமக்களை விழிப்புணர்வூட்டி கழிவுகளை தரம்பிரித்து முறையாக முகாமைத்துவம் செய்வதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

(இ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| | | |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் ரூபா 32 மில்லியன் மதிப்பீட்டில் ரூபா 13,654,689 செலவிடப்பட்டு மத்திய அரசின் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சினால் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ள போதிலும் இதற்கு அருகாமையில் திண்மக்கழிவுகளை போடப்படுவதினால் 02 வருடங்களுக்கு மேலாக இச் சிறுவர் பூங்காவினை பொதுமக்கள் பயன்படுத்த முடியாதுள்ளது. | பொதுமக்களின் பயன்பாட்டுக்கு விடப்பட வேண்டும். | குறித்த பூங்காவில் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதோடு, நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் பின்னர் மக்கள் பாவனைக்காக திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன். |

(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| | | |
|---|---|---|
| 2001 ஆம் ஆண்டின் சராசரியாக ரூபா 10 மில்லியன் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 64 கடைத் தொகுதிகளைக் கொண்ட பிரதான வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டிட தொகுதி இதுவரை மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டு வாடகை வருமானம் எதுவும் பெறப்படாது மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. | தீர்ப்பு வந்ததும் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2009 டிசம்பர் மாதம் 18ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் (வழக்கு இலக்கம் L/5320) வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு இன்று வரை நடைபெற்று வருகின்றது. இதன் காரணமாக நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கும் வரை சந்தையினை மக்கள் பாவனைக்கு வழங்க முடியாதுள்ளதுடன் வருமானமும் அறவிட முடியாதுள்ளது. |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புன்னைக்குடா வீதியில் அமைந்துள்ள இரண்டு வணக்க ஸ்தலங்களுக்கு சொந்தமான காணியினை 33 வருடங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு பெற்று ரூபா 193 மில்லியன் மதிப்பீட்டில் சந்தைக் கட்டிட தொகுதியினை அமைக்க ஒக்டோபர் 2016 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டு அத் திகதியில் இருந்து மாதாந்தம் ரூபா 56,000 வாடகை செலுத்தப்படுகின்ற போதிலும் சந்தைக் கட்டிடத் தொகுதி முடிவடையாததினால் நில வாடகை ஒக்டோபர் 2016 இல் இருந்து வருமானம் ஏதுவும் பெறப்படாத நிலையில் அவ் வணக்க ஸ்தலங்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றது. | விரைவில் திறந்து மேலும் வருமானத்தை ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்தத்தினடிப்படையில் மாதாந்தம் 56,000 நில குத்தகை வாடகையாக இரண்டு பள்ளிவாசல்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.எனினும்,குறித்த சந்தையானது புகையிரத நிலைய வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.அதற்கமைவாக நாளாந்தம் அச்சந்தையில் பெறப்படும் வருமானத்தின் மூலமே வாடகை செலுத்தப்பட்டு வருகின்றது. |

3.3 **மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**<br><br>மூன்றாம் நிலை 03 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களும் ஆரம்ப நிலை 20 மிகைகளும் கானப்பட்டன. | மிகைகயான உத்தியோகத்தர்கள்மாற்றுவதற்கும் வெற்றிடங்கள் நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எமது நகர சபையில் 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த / பதிலீட்டு அடிப்படையிலான ஊழியர்கள் அவசியத் தேவையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு சபையின் நிதி நிலைமைகளுக்கமைவாக நாளொன்றுக்கு ரூபா 391 வேதனத்திற்குக் கடமையாற்றி வந்தனர். இவர்கள் கிழக்கு மாகாண முதலமைச்சு செயலாளரின் அனுமதியுடனேயே தற்காலிக அடிப்படையிலான ஊழியர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.<br>இவர்களுள் 40 ஊழியர்கள் 180 நாட்கள் கடமையினைப் பூர்த்தி செய்துள்ள அடிப்படையில் அரச நிருவாகச் சுற்றிலக்கங்கள் 25/2014, 25/2014 (I) இற்கமைவாக நிரந்தர ஊழியர்களாக (Personal to Holder) சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.<br>இக்காரணத்தாலேயே ஆரம்ப நிலைப் பணியாளர்களின் உள்ளபடியான எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட ஆளணியிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.<br>தற்போது இடம்பெற்று வரும் ஆளணி உருவாக்கல் நடைமுறையினூடாக எமக்குத் தேவையான ஆளணிகளைப் பெற்றுக் கொள்ள அனுமதி கோருவதன் மூலம் இப்பிரச்சனை தீர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களை பதிவேட்டில் உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது தனக்கு உரித்தான சகல காணி கட்டிடங்களையயும் இனங்கண்டு அவற்றை அடையாளப்படுத்தி வைத்திருக்க உரிய நடவடிக்கையினை மீளாய்வாண்டு வரை எடுத்திருக்கவில்லை. | எல்லாச் சொத்துக்களும் உட்படுத்தப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றன என்பதனை அறியத்தருகின்றேன். |

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 04 இழுவை இயந்திரங்கள் 03 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் காணப்படுகின்றது. | பொருத்தமான நடவடிக்கையினை எடுக்கவும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.4.3 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் 09 வாகனங்களுக்கு வாகன பதிவுச் சான்றிதழ் புத்தகம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள சட்ட திட்டங்களுக்கு அமைய பெறப்பட்டிருக்கவில்லை. Pickup, Tractor, Roller, 02 water bowser நீண்ட நாட்களாக திருத்தப்படாது காணப்படுகின்றது. மேலும் 03 சிறியரக Tractor கள் பல வருடங்களாக கழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. | சபையில் காணப்படும் சகல வாகனங்களுக்கும் வாகன பதிவுச் சான்றிதழ பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | குறித்த வாகனங்கள் ஏலை விற்பனைக்கு சிபாரிசு செய்யப்பட்டு விற்பனை செயிவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

#### 3.4.4 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கருமாரியம்மன் கோயில் வீதி வடிகான் அமைப்பு வேலைகளுக்கு 2015 ஆம் ஆண்டில் இருந்து 5 கட்டங்களாக ரூபா 8,324,190 மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 9,048,855 செலவிடப்பட்டுள்ள போதிலும் வேலைகள் இன்னும் பூரணமாக முடிவடையவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சனை ஏற்படா வண்ணம் பார்த்து கொள்ள வேண்டும். | குறித்த வேலைகள் குறித்த ஆண்டில் செய்து முடிக்கப்பட்டமையால் மதிப்பீட்டுத்தொகையை விட செலவுத் தொகை அதிகமாக காணப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| **(ஆ) அதிகாரமளிக்கப்படாத அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணம்** | | |
| யூடிஏ, ஆர்டிஏ மற்றும் சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமை காரணமாக இக் கட்டிடம் அங்கீகரிக்கப்படாத கட்டிடமொன்றாக கருதப்பட்டிருந்தது. | குரித்த நிருவனங்களிலிருந்து சட்ட ரீதியான அனுமதியினை பெற்றுக்கொல்ல விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியை பெற்றுக்கொல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது |
| **(இ) நூலகக் கட்டிடத் தொகுதியுடனான கலாச்சார மண்டபம்** | | |
| (i) ஒப்பந்ததாரர் உண்மையாக 400.42 கன மீற்றர் மண்ணை வழங்கி நிரப்பியிருந்த போதிலும் சபையானது 988.80 கன மீற்றர் மண் வழங்கி நிரப்பியதாக ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. இதன் விளைவாக, ரூபா 1,176,760 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாயி செலுத்தப்பட்டவை அரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான அறிக்கையை மெற்றுக்கொல்வதற்காக தொழில்சார் நிபுணத்துவ அறிவும் அனுபவமும் உள்ள குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) ஒப்பந்ததாரர் 66.04 கன மீற்றர் தடிப்பான தளவேலைகளை மேற்கொண்டிருந்த போதிலும் கொடுப்பனவானது 93.75 கன மீற்றர் தடிப்பான தளத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுஇதன் விளைவாக, ரூபா 387,980 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | அறிக்கை பெற விரைவுபடுத்துவதுடன் பிரதி ஒன்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும | இது தொடர்பான அறிக்கையை மெற்றுக்கொல்வதற்காக தொழில்சார் நிபுணத்துவ அறிவும் அனுபவமும் உள்ள குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (iii) ஆர்டிஏ, யூடிஏ மற்றும் சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமல் இந்த நிர்மாணம் மேற்கொள்ளப்படுகின்றது. | அனுமதி பெறப்பட வேண்டும். | அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையினால் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இப் பிரிவின் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் தலைமையில் இப்பிரிவினை நிறுவி அதன் நடவடிக்கைகளை கணக்காய்விற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் மட்டுமே கூட்டப்பட்டுள்ளது. | 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் மூன்று நடைபெற்றுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |